**கலேவல பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மே 03 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 27 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 27 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கலேவல பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் இரண்டு சந்தர்ப்பங்களின் போது சபையின் கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 590,000 தொகையான பெறுமதி மூலதனமாக்கப்படவில்லை. | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (ii) | நிலையான சொத்துக்களின் கூட்டுத்தொகையும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதியும் சமமாக இருக்கவேண்டிய போதிலும் ரூபா 1,166,909 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (iii) | உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்ற கடனுக்காக எதிர்வரும் வருடத்திற்காக செலுத்த | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் |

| | | |
|---|---|---|
| வேண்டிய ரூபா 6,105,856 தொகையான கடன் வட்டி பொறுப்பாக கணக்கீடு செய்யப்படவில்லை. | | சரி செய்யப்படும். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 380,517,187 கூட்டுத்தொகையான 07 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய உபயோகப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 109,215,357 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | மீதிகளின் வேறுபாட்டை இணக்கஞ்செய்து கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | இந்த வேறுபாடு நீண்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்றமையால் முன்னைய ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களுடன் ஒவ்வொன்றாக பரீட்சித்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 217 | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீ.எஸ். 46 படிவத்தின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேடொன்று நாளதுவரையாகப் பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. | பதிவேடு நாளதுவரையயாக்கப்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு பீ.எஸ்.46 பதிவேட்டில் நாளதுவரையாக்கப்படும் |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 104(1)(அ) | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் விபத்திற்குட்பட்ட 02 இயந்திர உபகரணங்கள் தொடர்பாக பொறுப்பு வாந்தவரை இனங்கண்டு கொள்வதற்கு பரிசோதனை நடாத்தப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம் பொறுப்பு வாந்த நபரை தீர்மானிக்க வேண்டும் | எதிர்காலத்தில் இந்த வாகனங்களை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது |
| (ii) | 570(அ) | ரூபா 1,712,721 பெறுமதியான 02 வருடங்களைக் கடந்த 146 வைப்புக்கள் வருமானத்திற்கு எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 570(அ) இன் பிரகாரம் காலம் கடந்த வைப்புக்களை வருமானத்தில் செலவு வைக்கப்பட வேண்டும். | இந்த பதிவேடுகளை பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2015 பெப்ரவரி 02 ஆந் திகதிய 1900/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி | பிரதேச சபைகளின் உறுப்பினர்களுக்கு ரூபா 1,000 தொகையான தொலைபேசிப் படி மாத்திரம் செலுத்த முடியுமாக இருந்த போதிலும் பிரதேச சபையின் உப தலைவருக்கு 2018 திசெம்பர் 13 ஆந் திகதிய பொதுச் சபைக் கூட்ட தீர்மானத்தின் மூலம் மாதாந்தம் ரூபா 5,000 தொகை ஆகக்கூடியதன் கீழ் தொலைபேசிப் படி செலுத்தப்பட்டிருந்தது. | உரிய விதிகளின் பிரகாரம் தொலைபேசிப் படி செலுத்த வேண்டும் | பொதுச் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் இந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | சபைக்குச் சொந்தமான அனேக வாகனங்களின் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | மிகவும் விரைவாக எரிபொருள் எரிவு பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | நிதி அமைச்சுச் செயலாளரின் 2015 யூலை 14 ஆந் திகதிய 04/205 ஆம் | அரச நிறுவனங்களுக்காக காப்புறுதி மேவுகையை பெற்றுக்கொள்ளும் போது அந்த | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | உரிய காப்புறுதி நிவனத்திடம் நேரடியாக காப்புறுதி மேவுகையை பெற்றுக்கொள்வதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு | சேவையினை நேரடியாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான 18 வாகனங்களுக்காக முகவர் மூலம் காப்புறுதி மேவுகை பெறப்பட்டிருந்தது. | | நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | மத்திய மாகாண பிரதம செயலாளரின் 2013 ஏப்ரல் 11 ஆந் திகதிய சீபீசீ/ஏஎஸ் /06/06/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவு | சபையில் சேவையாற்றுகின்ற 08 பதவிகளுக்குரிய 19 உத்தியோகத்தர்களினால் பிணை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | சுற்றறிக்கையின் பிரகாரம் பிணைப் பணத்தை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4.2 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தாத கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கந்துரட்ட அபிவிருத்தி வங்கி நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டிடத்தின் பழுதுபார்த்தல்கள் மற்றும் ஆதனவரி செலுத்துதல் உரிமையாளரால் செய்யப்படும் என்ற அடிப்டையில் மாதாந்த அரசாங்கத்தின் மதிப்பீடு ரூபா 70,000 தொகையாக காண்பிக்கபட்டிருந்த போதிலும் அறவிடப்படுகின்ற வாடகை ரூபா 38,000 ஆனமையால் மாதாந்தம் ரூபா 32,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட வேண்டும் | எதிர்காலத்தில் மதிப்பீட்டு வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19(1) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரமின்றி கலேவல பொது நூலகத்தின் நூலக உதவியாளர் தரம் III பதவிக்காக 2018 ஆகஸ்ட் | பிரதேச சபைகள் அதிகாரச் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

18 ஆந் திகதி நியமிக்கப்பட்டு சம்பளம் மற்றும் படியாக மாதாந்தம் ரூபா 31,824 தொகை வீதம் செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,446,141 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,022,288 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 19,978,000 | 2,706,087 | 2,897,105 | 2,286,153 | 2,353,000 | 2,817,440 | 2,851,489 | 2,397,884 |
| (ii) | வாடகை | 4,950,000 | 3,298,552 | 3,338,304 | 643,608 | 16,600,000 | 4,188,262 | 4,249,292 | 615,930 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,400,000 | 2,807,345 | 2,807,345 | - | 3,050,000 | 2,861,100 | 2,861,100 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 1,170,000 | 1,625,110 | 1,625,110 | - | 1,145,000 | 1,222,402 | 1,205,502 | - |
| | மொத்தம் | 29,498,000 | 10,437,094 | 10,667,864 | 2,929,761 | 23,148,000 | 11,089,204 | 11,167,383 | 3,013,814 |

#### 2.2.2 ஆதன வரி

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை மற்றும் ஆண்டின் சிட்டையில் ரூபா 3,568,027 தொகையிலிருந்து ஆண்டில் ரூபா 1,926,735 தொகை கிடைத்திருந்தது. | நிலுவைப் பணம் அறவிடப்பட வேண்டும். | இந்த நிலுவைப் பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 06 அரசாங்க நிறுவனங்களின் நிலுவை ஆதன வரியான ரூபா 233,444 தொகை 2011 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து அறவிடவேண்டியிருந்தது. | வாடகை உடன்படிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இந்த நிலுவைப் பணத்தை விரைவாக அறவிடுவதற்கு உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற தொலைத் தொடர்பு கோபரங்களை இனங்கண்டு வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடுவதற்காக உப விதி விக்கப்படவில்லை. | வருடாந்தம் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | தொலைத் தொடர்பு கோபரங்களை ஸ்தாபிக்கும் போது கட்டணம் அறவிடப்படுவதுடன் வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடுவதில்லை என்பதை அறியத்தருகின்றோம். |

### 2.2.4 நீர்க் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் நிலுவையுடன் ஆண்டின் சிட்டையில் ரூபா 1,439,783 தொகையிலிருந்து ஆண்டில் 66 சதவீதம் அதாவது ரூபா 950,257 தொகை அறவிடப்பட்டிருந்தது. | நிலுவைப் பணம் அறவிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சகல நிலுவை பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.5 இறைச்சிக் கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 வருடங்கள் அளவிலான காலமாக கலேவல மாட்டிறைச்சிக் கடையிலிருந்து ரூபா 412,302 தொகை அறவிடவேண்டியதாகக் காணப்பட்டது. | உரிய நிலுவைப் பணம் அறவிடப்பட வேண்டும். | இந்தப் பணம் தவணையாக தற்போது அறவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டுள்ள உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டிய இலக்குகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் அபிவிருத்தி செயற்திட்டங்கள் என்ன என்பது பற்றி குறிப்பிடவோ அல்லது ஒவ்வொரு பணிகளுக்குமான மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடோ காண்பிக்கப்படவில்லை. | அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு காண்பிக்கப்பட வேண்டும். | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கான அபிவிருத்தி செயற்திட்டங்கள் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் வருடாந்த அபிவிருத்தி செயற்திட்டத்தில் அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு உள்ளடக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

#### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதா, இல்லையா என்பது தொடர்பாக கணக்காய்விற்கு தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் அடையப்பட்டமைக்கான தகவல் வழங்கப்பட வேண்டும். | இதற்காக பல்வேறு செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றோம். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 2017 ஆம் ஆண்டுகளில் விபத்திற்குட்பட்டிருந்த இயந்திர உபகரணம் விபத்திற்குள்ளாகி 02 வருடங்களுக்கு அதிகமான காலம் கடந்திருந்த போதிலும் காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக்கொள் வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக காப்புறுதி நிறுவனத்துடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | மத்திய மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டம் 2018 இன் கீழ் சியம்பலாகஹவெல கிராம உத்தியோகத்தர் பிரிவில் நீர்க் குழாய்களைப் பதித்தல் மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட ரூபா 3,587,500 தொகையான பணத்தை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பணத்தை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணத்தை மீளளிப்புச் செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையில் 08 பதவிகளில் 18 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | வெற்றிடங்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டதுடன் அலுவலகப் பதவிகளுக்காக ஆடசேர்ப்பதற்கு அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான 118 சனசமூக மண்டபங்கள், 82 மயான நிலங்கள், 251 பொதுக் கிணறுகள் மற்றும் 02 முன்பள்ளிப் பாடசாலைகள் என்பன பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். | இது தொடர்பாக பொருத்தமான நடிவடிக்கை எடுக்கப்படும். |

#### 3.4.2 பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான பெகோ இயந்திரம் ஒன்று விபத்திற்குள்ளாகி 02 வருடங்களுக்கு அதிகமான காலம் கடந்திருந்த போதிலும் பழுதுபார்க்கப்பட்டிருக்கவில்லை. | இயந்திரம் பழுதுபார்க்கப்பட வேண்டும். | இந்த இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கு நடிவடிக்கை எடுக்கப்படும். |

#### 3.4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வேன் வண்டியொன்று 02 வருடங்களும், கை டெக்ரர் ஒன்று 09 வருடங்களும் மற்றும் புல வெட்டும் இயந்திரம் ஒன்று 02 வருடங்களும் விளைவற்றுக் காணப்பட்டன. | பொருத்தமான நடிவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த வானங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடிவடிக்கை எடுக்கப்படும். |

**3.5 பெறுகை**

**ஓப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வாசலகோட்டே நூலக வளவில் வேலி அமைத்தல் | | |
| வாசலகோட்டே நூலக வளவில் வேலி அமைப்பதற்காக 2018 மார்ச் 22 ஆந் திகதி 80 வேலித் தூண்கள் ரூபா 160,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 நவம்பர் 09 ஆந் திகதி வரையிலும் வேலி நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய செயற்பாடுகள் மிக விரைவில் பூர்த்திசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வருடாந்தம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டில் 02 கூட்டத் தடவைகள் மாத்தரமே நடாத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடிவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கூட்டத்தை நடாத்துவதற்கு தயாரான போதிலும் உரிய உத்தியோகத்தர்களை அழைக்கும் போது ஏற்பட்ட வசதியீனத்தின் காரணமாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடிவடிக்கை எடுக்க முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். |